செ.வெ.எண்: 164 நாள் : 04.05.2021

**நீலகிரி மாவட்டத்தில், கொரோனா தடுப்பு பணிகள் தீவிரமாக மேற்கொள்வது மற்றும் கண்காணிப்பது தொடர்பாக, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் துறை அலுவலர்களுடனான ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.**

---

நீலகிரி மாவட்டத்தில், கொரோனா தடுப்பு பணிகள் தீவிரமாக மேற்கொள்வது மற்றும் கண்காணிப்பது தொடர்பாக, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் துறை அலுவலர்களுடனான ஆலோசனை கூட்டம் (03.05.2021) அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது :--

நீலகிரி மாவட்டத்தில் தினந்தோறும் கொரோனா தொற்று நோயினால் பாதிக்கப்படும் நபர்களின் எண்ணிக்கை அதிகரித்து கொண்டு வருகிறது. ஆகையால் அரசு தெரிவித்துள்ள கொரோனா தொற்று நோய் வழிகாட்டு நெறிமுறைகளை அலுவலர்கள் முழுமையாக கண்காணிக்க வேண்டும். குறிப்பாக, முககவசம் அணியாத நபர்களுக்கு உடனடியாக அபராதம் விதிக்க வேண்டும். அதேபோல் உணவகங்கள், டீ கடைகள் உள்ளிட்ட இடங்களில் அரசு தெரிவித்துள்ளபடி, பொதுமக்கள் சமூக இடைவெளியை கடைபிடிக்கிறார்களா என்பதனை தொடர்ந்து கண்காணித்து, சமூக இடைவெளி இல்லாத நிறுவனங்கள் மற்றும் கடைகள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், பொது இடங்களில் தேவையில்லாமல் பொதுமக்கள் கூடுகின்றனரா என்பதனை அலுவலர்கள் கண்காணித்து, அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நோய் கட்டுப்பாட்டு பகுதியில் வெளியாட்கள் உள்ளே வருகிறார்களா என்பதனையும், கட்டுப்பாட்டு பகுதியிலிருந்து நபர்கள் வெளியேறுகின்றனரா என்பதனையும் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். நமது மாவட்டத்தை சேர்ந்த பொதுமக்கள், நோய் தொற்று அதிகமாக உள்ள மாவட்டங்களுக்கு சென்று

வந்தால் தங்களை தனிமைப்படுத்தி கொள்ள வேண்டும் என்பதனை அவர்களிடையே தெரிவிக்க வேண்டும். நோய் கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு தினந்தோறும் கபசுர குடிநீர் வழங்கிட வேண்டும். மேலும், நோய் கட்டுப்பாட்டு பகுதிகளில் கிருமிநாசினி மூலம் சுத்தம் செய்யும் பணிகளை கட்டாயமாக மேற்கொள்ள வேண்டும். நோய் கட்டுப்பாட்டு பகுதிகளில் காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட வேண்டும். 3 நபர்களுக்கு மேல் கொரோனா தொற்று ஏற்பட்டால் அப்பகுதி நோய் கட்டுப்பாட்டு பகுதியாக அறிவிக்கப்படும். மேலும் கொரோனா தொற்று நோயினால் பாதிக்கப்பட்ட நபரின் வீடு மற்றும் அவரின் வீட்டின் அருகில் இருபுறங்களிலும் உள்ள 10 வீடுகளிலும் கிருமிநாசினி மூலம் சுத்தம் செய்ய வேண்டும். இப்பணிகளை தொடர்ந்து 7 நாட்கள் மேற்கொள்ள வேண்டும். கொரோனா தடுப்பூசி போடாத நபர்களை கொரோனா தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும் என்பதனை குறித்து அவர்களிடையே தேவையான விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும்.

நோய் கட்டுப்பாட்டு பகுதிகளில் மேற்கொள்ளப்படும் கிருமிநாசினி தெளிக்கும் பணிகள் உள்ளிட்ட நோய் தடுப்பு பணிகளை வருவாய் கோட்டாட்சியர்கள் மற்றும் வட்டாட்சியர்கள் கண்காணிக்க வேண்டும். ஒரு வீட்டில் ஒரு நபருக்கு கொரோனா தொற்று நோய் ஏற்பட்டு, வீட்டிலே தனிமைப்படுத்தி கொண்டிருந்தாலும், அவரது வீட்டிலுள்ள அனைத்து குடும்ப உறுப்பினர்களும் முககவசம் அணிய வேண்டும். பொதுமக்கள் மூக்கு மற்றும் வாய் மூடியவாறு முககவசம் அணிய வேண்டும். நோய் கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள பொதுமக்கள் அரசின் நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்ற தவறினால் சம்மந்தப்பட்ட நபர்கள் மீது பேரிடர் மேலாண்மை சட்டம் (பிரிவு 51 முதல் 60 வரை)-ன்படியும், தமிழ்நாடு பொது சுகாதார சட்டம் பிரிவு (59,60,62,65,68,69,71,72,73,76,81,129,135)-ன்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும். அதே போல் முககவசம் அணியாத நபர்கள், சமூக இடைவெளியினை கடைப்பிடிக்காத நபர்கள் மற்றும் நோய் தொற்று வழிமுறைகளை பின்பற்றாத நபர்களை கண்டறியப்பட்டு அபராதம் விதிக்கும் பட்சத்தில், அதற்கு ஒத்துழைப்பு வழங்காத நபர்கள் மீதும் எழுத்து பூர்வமாக புகார்கள் பெறப்பட்டு காவல் துறையினர் மூலம் வழக்கு பதிவு செய்ய வேண்டும்.

சனி மற்றும் ஞாயிறு ஆகிய இரு நாட்களிலும் மீன் மற்றும் இறைச்சி கடைகள் மூடப்படுகின்ற காரணத்தினால், வெள்ளிக்கிழமை அன்று அதிகபடியான பொதுமக்கள் கூட வாய்ப்புள்ளது. ஆகவே, இப்பகுதிகளில் உள்ளாட்சித்துறை அலுவலர்கள் தீவிரமாக கண்காணிக்க வேண்டும். அரசு தெரிவித்துள்ளபடி கொரோனா நோய் தொற்று வழிமுறைகளை முழுமையாக பின்பற்றாத நபர்கள் மீது உடனடியாக அபராதம் விதிக்க வேண்டும். மேலும், கடைகள் மீது எந்த ஒரு பாராபட்சமும் பார்க்காமல் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். கொரோனா நோய் தொற்று பணிகளை அலுவலர்கள் தொய்வின்றி முழு ஈடுபாட்டுடன் மேற்கொள்ள வேண்டும். தவறும் நபர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பு அலுவலர் திரு.இரா.பாண்டியராஜன், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.நிர்மலா, உதகை சார் ஆட்சியர் டாக்டர்.மோனிகாரானா இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.கெட்சி லீமா அமாலினி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது (பொ) திரு.முகம்மது குதுரதுல்லா, கூடலூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.ராஜ்குமார், இணை இயக்குநர் (மருத்துவ நலப்பணிகள்) மரு.பழனிசாமி, துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு.பாலுசாமி, உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) திருமதி.மனோரஞ்சிதம், சுகாதாரத்துறை அலுவலர்கள், வருவாய்த்துறை அலுவலர்கள், உள்ளாட்சித்துறை அலுவலர்கள் உள்ளிட்ட அரசுத்துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்.